**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**MCOP.21/2024**

2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 21 ஆம் நாள் புதன் கிழமை எ.ம.சா.2 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திருமதி. மகாலெட்சுமி Gr.II Bench Clerk அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | கபிலன் | த/பெ.: | கலியமூர்த்தி |
| கிராமம்: | மன்னார்குடி | தாலுக்கா: | மன்னார்குடி |
| மதம்: | இந்து | தொழில்: | நிர்வாக அலுவலர் |
| வயது: | 30 | முகவரி: | மன்னார்குடி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 21.01.2026.

**முதல் விசாரணை:–**

நான் இந்த மனுவில் 3ம் எதிர்மனுதாரர் ஆவேன். நான் எனது முதன்மை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நான் சொல்லி தான் தயார் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| எ.ம.சா.ஆ.2 | 11.06.2020 | TN 50 – AT – 7660 ECCO PRIVATE CAR –ன் காப்பீட்டு பாலீசி | நகல் |
| எ.ம.சா.ஆ.3 | 11.07.2023 | குற்றப்பத்திரிக்கை | நகல் |
| எ.ம.சா.ஆ.4 | 14.06.2023 | பிரேத பரிசோதனை இறுதி அறிக்கை | நகல் |

மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவை தள்ளுபடி செய்யவேண்டுமென பிரார்த்திக்கிறேன்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:–**

எங்களுடைய காப்பீட்டு நிறுவனத்தில் வீரமணி ஓட்டிச்சென்ற TN 50 – AT – 7660 என்ற ECCO PRIVATE CAR எங்களது நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். விபத்து காலத்தில் காப்பீடு அமலில் உள்ளது என்றால் சரிதான். எங்கள் நிறுவனத்திடன் Total package policy எடுத்துள்ளார். விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. எங்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்ற இறுதி அறிக்கையில் வீரமணியினுடைய அஜாக்கிரதையும், கவனக்குறைவும், மது அருந்தி வாகனத்தை ஓட்டியதும் தான் இந்த விபத்திற்கு காரணம் என குறிப்பிடப்பட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கையிலும் குற்றம் சாட்டப்பட்டவர் வீரமணி என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது. இதே விபத்து சம்பந்தப்பட்ட கோரிக்கை மனுவானது தஞ்சாவூர் சிறப்பு மோட்டார் வாகன தீர்ப்பாயத்தில் MCOP 822/2023 என தாக்கல் செய்யப்பட்டு இருந்தது என்றால் சரிதான். அதில் எங்கள் நிறுவனத்திலும் ஆஜராகி சாட்சியம் அளித்துள்ளார்கள். அந்த வழக்கில் 10.09.2024–ல் தீர்ப்பாகியுள்ளது. மேற்படி தீர்ப்பில் மனுதாரர்களுக்கு எங்கள் காப்பீட்டு நிறுவனம் தான் இழப்பீடு வழங்கவேண்டும் என யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனத்தை பொறுத்து மனுவை தள்ளுபடி செய்துள்ளார்கள் என்றால் சரிதான். இந்த விபத்திற்கு வீரமணியின் அஜாக்கிரதையும், கவனக்குறைவும் தான் காரணம் என்றும், யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனமோ அல்லது அதில் காப்பீடு செய்த லாரியோ இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர்கள் அல்ல என்று சொன்னால் சரியல்ல. எங்கள் நிறுவனத்தால் விபத்து குறித்து ஆராய்வாளர் நியமிக்கப்பட்டு ஆராய்வாளர் அறிக்கை எங்கள்

நிறுவனத்தில் பெற்றுள்ளோம். அந்த அறிக்கையை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கின் மனுதாரர்களுக்கு எங்கள் நிறுவனம் தான் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

நான் இந்த விபத்தை நேரடியாக பார்க்கவில்லை. எ.ம.சா.ஆ.3 –ன் படி வண்டி ஓட்டுநர், உரிமையாளர் மற்றும் பயணம் செய்த அனைவருக்கும் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றும், அதனால் எங்கள் நிறுவனம் இழப்பீடு தொகை கொடுக்க கடமைப்பட்டவர் என்று சொன்னால் சரிதான். சளி சிரப்பில் ஆல்கஹால் உள்ளது என்று சொன்னால் சரிதான். எ.ம.சா.ஆ.3 ஆவணத்தில் ஆல்கஹாலின் சதவீதம் குறித்து மருத்துவர் குறிப்பிட்டுள்ளாரா என்றால் இல்லை. ஓட்டுநர் வீரமணி என்பவர் மது அருந்தும் பழக்கம் கிடையாது என்றும், சளி ஏற்பட்டதால் சளி சிரப்பு அருந்தியதால் காவல் துறை தாக்கல் செய்த இறுதி அறிக்கையில் மது அருந்தி இருப்பதாக சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் மனுதாரர்களுக்கு நஷ்ட ஈடு தொகை கொடுக்கக்கூடாது என்ற காரணத்திற்காக பொய்யான ஆவணங்களை தாக்கல் செய்து சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எங்கள் நிறுவனத்தில் Total package Policy விபத்து காலத்தில் அமலில் இருந்து வருவதால் மனுதாரர்களுக்கு எங்கள் நிறுவனம் இழப்பீடு தொகை கொடுக்க கடமைப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:- இல்லை.</u>**

Typed down to my dictaion, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.